**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13-ம் தேதி மனுதாரர் தரப்பு சாட்சி மா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எஸ்.விஜய் அழகிரி, பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நி.வே.இ.ம.எண்.2/2023 நி.வே.இ.ம.எண்.1/2022 நி.வே.ம.எண்.154/2006

மா.சா.1 தாமோதரன், த/பெ. பொங்கியண்ணன்

**குறுக்குவிசாரணை 1வது எதிர்மனுதாரர் தரப்பில்:-**

அ.வ.எண்.885/1993 என்ற வழக்கை உத்தமி பழனிவேல் என்பவர் என்மீது தாக்கல் செய்து பிறப்பித்த ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் யார்யாருக்காக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் எனக்காகவும், சிவகாமிக்காகவும், ஈரோடு ஸ்பின்னிங் மில்ஸ்க்காகவும் தாக்கல் செய்திருக்கிறேன். நி.வே.இ.ம.எண்.1/2022 ல் எனது மனைவி சிவகாமிக்கெதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றால் அது எனக்கு தெரியவில்லை. ஈரோடு ஸ்பின்னிங் மில் தற்போது அதன் பெயர் என்னவாக மாறியிருக்கிறது என்றால் பிளாட்டினம் டிரேடு சென்டர் பிரைவேட் லிமிடெட் என்று பெயர் மாற்றப்பட்டிருக்கிறது. அசல் வழக்கு எண்.885/1993 வழக்கில் நானும், மற்ற பிரதிவாதிகளும் சேர்ந்து தனித்தனியாகவும், கூட்டாகவும் தொகையை திருப்பி செலுத்தவேண்டும் என்று தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ள விவரத்தை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அசல் வழக்கு எண்.885/1993 தீர்ப்பாணையை நிறைவேற்றம் செயக்கோரி உத்தமி பழனிவேல் என்மீதும், என் சகோதரர் தாமோதரன் மீதும் கைது செய்வதற்கு நிறைவேற்று மனு தாக்கல் செய்திருந்தாரா என்றால் ஆமாம். நி.வே.இ.ம.எண்.1/2022ல் என் மீதும், என் சகோதரர் மீதும் தான் திருத்தல் மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றும், 1வது மனுதாரர் ஈரோடு ஸ்பின்னிங் மில்லுக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் நி.வே.ம.எண்.154/2006ல் 2வது எதிர்மனுதாரர் 01.02.2007

தேதியிட்ட வக்காலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்தா என்றால் இல்லை. நி.வே.ம.எண்.154/2006ல் 30.10.2009 தேதியிட்ட 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதாகும். நி.வே.ம.எண்.154/2006ல் எனக்கு முதலில் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். அப்பொழுது நான் வழக்கறிஞர் வைத்து ஆஜரானேன் என்றால் இல்லை. அந்த நிறைவேற்று மனுவில் என்ன உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்ற விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நான் வழக்கறிஞர் ஜெகநாதன் என்பவரை வைத்து நி.வே.ம.எண்.154/2006ல் வக்காலத்து தாக்கல் செய்தபிறகு அந்த நிறைவேற்று மனுவில் ஏற்கனவே எனக்கு ஒரு வழக்கறிஞர் ஆஜராகி இருந்தார் என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் ஜெகநாதன் வழக்கறிஞர் எனக்காக யாரும் ஆஜராகவில்லை என்று கூறினார். ஜெகநாதன் வழக்கறிஞர் மூலம் நான் நிறைவேற்று மனுவின் நகல் பெற்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதில் எனக்காக ஒரு வழக்கறிஞர் ஆஜராகியிருந்த விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் நீண்டநாள் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை. அந்த நிறைவேற்று மனுவில் முழு விசாரணைக்கு பிறகு என்னையும், என் சகோதரரையும் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். நீதிமன்றத்திலிருந்து அமீனா மூலம் கைது செய்ய வாரண்ட் வந்தபிறகு தான் நான் நகல் போட்டு பார்த்தேன் என்றால் சரிதான். அந்த நகல்கள் எல்லாம் தற்போது என் கைவசம் இருக்கிறதா என்றால் இல்லை. கைது உத்தரவை எதிர்த்து எனது சகோதரர் சிவானந்தம் சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த விவரத்தை நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் நி.வே.இ.ம.எண்.1/2022 தாக்கல் செய்தபிறகு தான் தெரிந்துகொண்டேன். சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்ய நான் மேல்முறையீடு செய்தேனா என்றால் இல்லை. நி.வே.ம.எண்.154/2006ல் எனக்காக ஏற்கனவே ஒரு வழக்கறிஞர் ஆஜராகியிருந்த விவரத்தை நான் நகல் போட்டு பார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் தற்போதைய எனது வழக்கறிஞர் சொன்னார். அந்த நிறைவேற்று மனுவில் எனக்காக எந்தெந்த வழக்கறிஞர்கள்

ஆஜராகியிருந்தார்கள் என்றால் வழக்கறிஞர் ஜெகநாதன் மற்றும் சி. தங்கவேல் ஆகியோர்கள் ஆஜராகியிருந்தார்கள். நான் தாக்கல் செய்துள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்திலுள்ள விவரங்கள் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள் நி.வே.இ.ம.எண்.2/2023 மனுவின் பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 14ல் எனக்காக ஜெகநாதன் வழக்கறிஞர் ஆஜரானதாக உள்ளதா என்றால் அதில் இல்லை. நான் ஈரோடு ஸ்பின்னிங் மில் நிறுவனத்தை பிளாட்டினம் டிரேடிங் சென்டராக மாற்றிய விவரத்தை நான் வழக்கறிஞர் வைத்து ஆஜரான பிறகு அந்த விவரத்தை நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றால் அதற்கான சூழ்நிலை 2022வரை வரவில்லை. எனக்காக வழக்கறிஞர் புவனேஸ்வரன் என்பவர் ஆஜரான விவரத்தை தற்போதைய வழக்கறிஞர் சி.தங்கவேல் அவர்கள் சொல்லித்தான் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 ல் 2வது பக்கம் மட்டும் தான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். முதல் பக்கம் என்ன ஆனது என்றால் நீண்டநாள் ஆனதால் ஆடிட்டரிடமிருந்து கிடைக்கவில்லை. ம.சா.ஆ.1ஆனது அசலில் இருந்து தான் ஜெராக்ஸ் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். எப்பொழுது ஜெராக்ஸ் எடுக்கப்பட்டது என்றால் ம.சா.ஆ.1ல் 22.12.2023 அன்று தான் அசலிலிருந்து ஜெராக்ஸ் எடுக்கப்பட்டதாகும். ம.சா.ஆ.1க்கான அசலை என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். அடுத்த வாய்தாவில் என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். பொதுவாக தீர்மானம் போடும்போது இயக்குநர்கள் அனைவரும் கையெழுத்த செய்வார்கள் என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆனது எங்களது Resolution புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது என்றால் ஆமாம். அந்த Resolution புத்தகத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆடிட்டர் இறந்துவிட்டதால் நான் தாக்கல் செய்யவில்லை. ம.சா.ஆ.2ல் எனது கையெழுத்தோ, சிவனாந்தம் கையெழுத்தோ, மகேந்திரன் கையெழுத்தோ இல்லை என்றால் சரிதான். அதில் அவர்களின் பெயர்கள் மட்டும் தட்டச்சு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். ம.சா.ஆ.2 பஞ்சாயத்து பாக கரா பரிவர்த்தனை பத்திரத்தை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.2யை பதிவு செய்யப்படாததால் இந்த மனுவிற்காக நானாக தயார் செய்து தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நீண்டகாலமாக பிஸ்னஸ் செய்து

வருவதால் எந்தெந்த ஆவணத்தை பதிவு செய்யவேண்டுமென்ற விவரம் தெரியுமா என்றால் கம்பெனி சம்மந்தமாகத் தான் தெரியும். ம.சா.ஆ.2ல் சாட்சிகளாக குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை விசாரிக்க போகிறேனா என்றால் இறந்து போனவர்களை தவிர மற்றவர்களை விசாரிக்க தயாராக இருக்கிறேன். ம.சா.ஆ.2ல் சாட்சிகள் என்ற இடத்திலும், கையெழுத்து இல்லையென்றால் சரிதான். சாட்சி என்ற இடத்தில் பெயர் மட்டும் தட்டச்சு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். ஈரோடு ஸ்பின்னிங் மில்லின் விலாசம் 23, ராமநாதபுரம் புதூர் அஞ்சல், பவானி மெயின் ரோடு, ஈரோடு என்றால் சரியல்ல. ஈரோடு ஸ்பின்னிங் மில்லின் விலாசம் 23, பவானி மெயின் ரோடு, ராமநாதபுரம் புதூர் அஞ்சல் என்றால் சரிதான். ம.சா.ஆ.6ல் அறிவிப்பினை எனக்காகவும், என் சகோதரருக்காகவும், வழக்கறிஞர் டி.புவனேஸ்வரன் அவர்கள் பெற்றுள்ளதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். இந்த மனுவில் உள்ள 1வது எதிர்மனுதாரர் தரப்பில் நி.வே.இ.ம.எண்.1/2022ல் எனக்காக வழக்கறிஞர் யார் ஆஜராகியிருந்தரோ அவருக்கு முறையாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3க்கான அசல் என்னிடம் இருக்கிறது. ம.சா.ஆ.3 ல் முதல் பக்கத்தில் எந்த தேதியில் அது எழுதப்பட்டது என்ற குறிப்பு அதில் இல்லை என்றால் சரிதான். ஆனால் அது 04.10.1994ல் நோட்டரி முன்பு கையெழுத்து செய்யப்பட்டதாகும்.

**1வது எதிர்மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**